# போருக்குப் பின்னரான சூழமைவினுள் முன்பள்ளி ஆசிரியர்களின் தொழில்சார் கல்விக்கான வாய்ப்புக்களும் வரையறைகளும்: கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**ரா. மங்களேஸ்வரசர்மா**

இலங்கை திறந்த பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம், இலங்கை
m4rajini@yahoo.com

**சுருக்கம்:** இலங்கையில் மூன்று தசாப்த காலமாக நடைபெற்ற போர் முடிவடைந்துள்ள நிலையில் நாட்டின் அபிவிருத்தி பற்றிய எண்ணக்கரு மேலெழுந்து வருகின்றது. நாட்டின் அபிவிருத்தியில் பங்களிக்கும் ஆற்றலுள்ள மனிதவள விருத்திக்கான கருவியாகவும் ஊடகமாகவும் கல்வியே பயன்படுகிறது. ஒவ்வொரு பிள்ளையினதும் எதிர்காலக் கற்றலிற்கும் முன்னேற்றத்திற்கும் முன்பள்ளிக் கல்வியே அடித்தளமிடுகிறது. போதிய பயிற்சி பெற்ற ஆற்றல் மிக்க தரமான ஆசிரியராலேயே வெற்றிகரமான முன்பள்ளிக்கல்வியை வழங்க முடியும். இலங்கையில் முன்பள்ளிக் கல்விச் செயற்பாடுகளோ முன்பள்ளி ஆசிரியர் கல்வியோ அரசினால் பொறுப்பேற்கப்படாத நிலையில் முன்பள்ளிக் கல்வி தொடர்பாக நாட்டில் பல்வேறு சமமின்மைகள் நிலவுகின்றன. இந்நிலையில் போரினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் முன்பள்ளிக்கல்விச் செயற்பாடுகள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர் கல்வி தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் அவதானிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் முன்பள்ளி ஆசிரியர் கல்வி தொடர்பாக கிடைக்கத்தக்க வாய்ப்புக்கள் பற்றியும் அவற்றைப் பயன்படுத்துவதில் உள்ள வரையறைகள் பற்றியும் இக்கற்கை ஆராய்கிறது. அளவைநிலை ஆய்வு வடிவமைப்பினுள் அளவறி மற்றும் பண்பறி ரீதியான அணுகு முறைகளை உள்ளடக்கியதாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தின் கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட நான்கு கோட்டங்களைச் சேர்ந்த 194 முன்பள்ளிகளில் பணியாற்றும் 382 ஆசிரியர்களில் 30 பேர் எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்டு அவர்களிடமிருந்து இந்த ஆய்விற்கான தரவுகள் சேகரிக்கப்பட்டன. வினாக்கொத்து, நோக்கக்குழுக் கலந்துரையாடல் போன்ற கருவிகள் இதன்பொருட்டு பயன்படுத்தப்பட்டன. கிளிநொச்சிக் கல்வி வலயத்தின் முன்பள்ளிக் கல்வி தொடர்பான உதவிக்கல்விப் பணிப்பாளர் மற்றும் சமூகப்பிரதிநிதிகள் ஆகியோரிடமிருந்து நேர்காணல் மூலம் தரவுகள் பெறப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகள் அட்டவணைப்படுத்தப்பட்டு சதவீத அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இந்த ஆய்வின் மூலம் முன்பள்ளி ஆசிரியர்களின் கல்வி மற்றும் பயிற்சி வாய்ப்புகளிற்கு போரினால் குடும்பச்சூழலில் ஏற்பட்ட பாதிப்புக்கள், பொருளாதார பற்றாக்குறைகள், போக்குவரத்து வசதியீனங்கள், கற்கைநெறி நுழைவுத்தகைமை தொடர்பான போதாமைகள், கற்கைநெறித் தெரிவுப்பரீட்சைகளில் சித்திபெறாமை போன்ற தனிநபர் சார்ந்த பிரச்சினைகளும் நிரந்தர நியமனம் வழங்கப்படாமை, கற்றலுக்கான ஊக்குவிப்பின்மை, தொழில்சார் அங்கீகாரம் வழங்கப்படாமை, உள்ளூரில் கல்வி நிறுவனங்கள் இல்லாமை போன்ற நிறுவனம் சார்ந்த பிரச்சினைகளும் தடைகளாக அமைவதாக அறியமுடிகிறது. இத்தகைய காரணங்களால் போருக்குப் பின்னரான சூழமைவிலும் பெரும்பாலான முன்பள்ளி ஆசிரியர்கள் எதுவித ஆசிரியர் கல்வியையும் பெறாதிருப்பதையும் தரவுகள் சுட்டிக்காட்டின. இப் பிரச்சினைகள் தொடர்பான தரவுகளின் பகுப்பாய்வின் அடிப்படையில் முன்பள்ளி ஆசிரியர்களின் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் அங்கீகாரத்தை உறுதிப்படுத்துவதற்கும் முன்பள்ளி ஆசிரியர் கல்வி வழங்கும் நிறுவனங்கள் தமது கல்வி வாய்ப்புக்களை பரவலாக்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் முன்பள்ளி ஆசிரியர்களின் தரமேம்பாட்டிற்கான கல்வி மற்றும் பயிற்சி வாய்ப்புக்களை முன்னேற்ற முடியும் என இந்த ஆய்வு விதந்துரைக்கின்றது.